பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 06 வியாழக்கிழமை 25.08.2022 கதிர் 181

## புதிய அமைச்சரவையை ஆக்கிரமிக்கும் 'மொட்டு'

### பிரதமரின் பதிலில் அம்பலம்

புதிய அமைச்சரவை நியமனத்தின்போது ஒவ்வொரு கட்சிகளினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப உரிய இடம் வழங்கப் படும். இதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார்.

-இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். ☞2

# லட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ தேரேறி வந்தான் அலங்காரக் கந்தன்!







வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந் திருவிழாவின் தேர் உற்சவம் இன்று நடைபெற்றது.

காலை 6.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று, நல்லூர் கந்தன் காலை 7 மணிக்கு தேரடியை நோக்கிப் புறப்பட்டான். காலை 7.15 மணிக்கு தேர் திருவீதி உலா வந்தது. லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டு 'அலங்காரக் கந்தன்' என்று வர்ணிக்கப்படும் நல்லூர் கந்தனை வழிபட்டனர்.

# நாம் நெருக்கடியிலிருந்து மீண்டெழ நல்லூர் கந்தனைப் பிரார்த்திப்போம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



இலங்கையில் சித்தர்கள் வாழ்ந்த, வரலாற்றுச் சிறப்பு மிக்க பூமியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நடந்து வரும் இத் தருணத்தில், நாடு எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியான சூழலை வெற்றிகொண்டு, அனைவருக்கும் நலம் நல்க நல்லூர் கந்தனைப் பிரார்த்திப்போம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ☞2

## 30 இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பர்?

அடுத்த அமைச்சரவை நியமிக்கப்படுவதற்கு முன்னர் அரசு 30 இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கவுள்ளது என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேண்டுகோளுக்கு இணங்க ☞2

## சீனாவிடம் இலங்கை கெஞ்சல்

கடன் நிவாரணம் தொடர்பான தனது நிலைப்பாட்டை 'வியத்தகு' முறையில் மாற்றிக்கொள்ளுமாறு சீனாவை இலங்கை கோருகின்றது என்று இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ☞2

## நல்லூரில் திருட்டு; சிக்கிய இளைஞர்

யாழ்., நல்லூரில் வேட்டியுடன் பக்தர் போல் பாசாங்கு செய்து ஏனைய பக்தர்களிடம் திருட்டுச்சம்பவங்களில் ஈடுபட்ட வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, ☞2

## இலங்கை மீண்டெழ 2 ஆண்டுகள் தேவை

### அநாவசிய செலவுகளைத் தவிருங்கள் என்று மக்களிடம் ரணில் வேண்டுகோள்



பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டெழ இரண்டு ஆண்டுகளாவது தேவை. அதிலும் எதிர்வரும் ஓராண்டு எமக்கு மிகப்பெரிய சவாலான ஆண்டாகும். ☞2

## சஜித் - டலஸ் அணியினர் வெகுவிரைவில் சங்கமம்

### உறுதிப்படுத்தினார் ரஞ்சித்



நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஒன்று உருவாக்கப்படும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. இன்று ☞2

### மானிப்பாய் தாக்குதல் சம்பவம் தொடர்பில்

## வாக்குமூலம் அளித்தவரின் வீட்டின் மீது கடும் தாக்குதல்



தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்த சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞரின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்., மானிப்பாய் பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் புகுந்து அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் இளைஞர் ☞2

## பெண்ணொருவர் வெட்டிக்கொலை!

குடும்பப் பெண் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வெலிமடை - சாப்புகடே பகுதியில் குறித்த பெண் காணாமல்போனமை தொடர்பில் அவரது மகள் வெலிமடைப் பொலிஸில்செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த பெண் ணின் சடலம் போர்வையால் சுற்றப்பட்டு ☞2

## கோட்டா எப்போது நாடு திரும்புவார்?



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எப்போது நாடு திரும்புவார் என்று எனக்குத் தெரியாது. நாடு திரும்புவதா? இல்லையா? என்பது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்.

-இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோட்டாபய ராஜபக்ஷ தனது சுயவிருப்பின் பிரகாரம் ☞2

## புதிய அமைச்சரவையை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சரவையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அதிகளவு அமைச்சுப் பதவிகள் வழங்கவேண்டும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்திருந்த நிலையில், அது தொடர்பில் ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோதே பிரதமர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அமைச்சரவையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது,அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் வலியுறுத்தியிருந்தமை உண்மைதான். எனினும், இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கும் 'மொட்டு' கட்சிக்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை.

அமைச்சுப் பதவிகள் தொடர்பில் 'மொட்டு'க் கட்சியினர் ஏற்கனவே என்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். எனவே, யார் யாருக்கு எந்த அமைச்சு வழங்குவது என்பது தொடர்பில் ஜனாதிபதியே இறுதி முடிவு எடுப்பார் - என்றார்.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலேயே அதிகளவானோர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டா எப்போது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டை விட்டு வெளியேறி ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்திருந்தார். தற்போது அவர் முன்னாள் ஜனாதிபதி. முன்னாள் ஜனாதிபதிக்குரிய வரப்பிரசாதங்கள் அவருக்கு உண்டு. இந்நிலையில், அவர் எப்போது நாடு திரும்புவார் என்று எனக்குத் தெரியாது. நாடு திரும்புவதா? இல்லையா? என்பது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்.

அவர் நாட்டுக்கு வந்தால் அரசியலில் ஈடுபடுவரா? இல்லையா? என்பது தொடர்பில் அவர்தான் தீர்மானம் எடுக்க வேண்டும் - என்றார்.

## இலங்கை மீண்டெழ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நிலையில் நாட்டு மக்கள் அநாவசி-யச் செலவுகளைத் தவிர்த்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை சேமித்து வைக்கவேண்டும்.

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

இலங்கை அரசால் 300 இற்கும் மேற்பட்ட பொருள்களுக்கு இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த 300 பொருள்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் பசியையாவது போக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் நான் பிரதமர் பதவியை(மேமாதம்)பொறுப்பேற்றேன். அதன் பின்னர் நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலைமையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி தெரிவில் நான் போட்டியிட்டேன். மக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடியிருக்கும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் ஜனாதிபதியாகத் தெரிவாகினேன். எனினும், மிகவும் சவால்மிக்க காலகட்டத்தில்தான் இந்த அதி உயர் பதவியில் நான் இருக்கின்றேன்.

பொருளாதார ரீதியில் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நான் முதலில் தீர்வு கண்டே தீருவேன். அதன் பின்னர் தேசிய ரீதியிலான ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் அனைத்துக் கட்சிகளின் கலந்தாய்வுடன் தீர்வுக்கான எனது பயணம் தொடரும் - என்றார்.

## பெண்ணொருவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் உள்ள பாழடைந்த கிணற்றில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தில் பாரிய வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன.

புரங்வெல பிரதேசத்தில் வசிக்கும் 54 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் வேறு ஒருவருடன் ஹோட்டல் நடத்தி வந்தார் எனவும், அந்த நபருடன் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக அந்த நபரே பெண்ணை வெட்டிக் கொலை செய்துள்ளார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணைக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் தலவாக்கலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிமடைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மானிப்பாய் தாக்குதல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவரை அழைத்து வாக்கு மூலத்தைப் பதிவு செய்திருந்தனர்.

பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்த இளைஞரின் வீட்டுக்கு நேற்று அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து, வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் அடித்து உடைத்து சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சீனாவிடம் இலங்கை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிக்கேய் ஏசியாவுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில், இது தொடர்பில் சீனாவுடன் உடன்பாட்டை எட்டுவது எளிதான காரியம் அல்ல என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே பெற்ற கடனை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியத்தை, சீன அரசிடம் தெரிவித்துள்ளார் என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

## நல்லூரில் திருட்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நல்லூர் கந்தசாமி ஆலய மகோற்சவம் இடம்பெற்றுவரும் நிலையில், ஆலயத்துக்குள் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டு வந்த குறித்த நபர் ஆலயத்துக்குள் கடமையிலிருந்த பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பக்தர்களிடம் நூதனமாகத் திருடிய வங்கி அட்டையைப் பயன்படுத்தி ஆலயத்துக்கு அருகில் உள்ள புடவை விற்பனை நிலையத்தில் ஆடைகளைக் கொள்வனவு செய்தபோதே குறித்த நபர் இனங்காணப்பட்டார்.

இதையடுத்து துரிதமாகச் செயற்பட்ட யாழ். பொலிஸார் கண்காணிப்புக் கமராவின் உதவியுடன் குறித்த நபரைக் கைதுசெய்த நிலையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சஜித் டலஸ் ......

கங்களிடம் தெரிவித்தார்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டலஸ் அணியினர் தனித்துவிடப்படவில்லை. அவர்களுடன் எமக்கு புரிந்துணர்வு இருக்கின்றது. விரைவில் அவர்கள் எதிரணியில் அமர்வார்கள் என நம்புகின்றோம். அனைவரும் இணைந்து பாரிய கூட்டணியை வெகுவிரைவில் உருவாக்குவோம். அந்தக் கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாஸ செயற்படுவார் - என்றும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி பிளவுபடாது என்றும், கட்சியின் முடிவை மீறி கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் திசைதிருப்பவே, போராட்டக்காரர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## 30 இராஜாங்க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நியமனம் இடம்பெறவுள்ளது.

கடந்த அரசில் இராஜாங்க அமைச்சர்களாக பதவி வகித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதிய அரசின் இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

அவர்களில் 40 பேரை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கேட்டுள்ளது. எனினும், 30 பேரையே ஜனாதிபதி நியமிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் அடுத்த வாரம் அல்லது செப்டெம்பர் முதல் வாரத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாம் நெருக்கடியிலிரு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பல வரலாற்றுச் சிறப்புக்களையும் மகிமைகளையும் கொண்ட நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா தற்போது வெகுவிமர்சையாக நடந்து வருகின்றது. இன்றுவியாழக்கிழமைகந்தப்பெருமான் தேரில் வீதி உலா வந்து, பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா விசேடமானது. இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் இன, மத பேதங்களைக் கடந்து லட்சக்கணக்கில் பக்தர்கள் இதன்போது ஒன்றுகூடுகின்றார்கள். வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள்.

இந்துக்களோடு சிங்கள பௌத்த மக்களும் ஏனைய சமயத்தவர்களும் தவறாது வழிபட்டு ஆசிபெறும் நல்லூர் கந்தனின் சிறப்பானது. இலங்கையின் அனைத்து சமூகங்களுக்கும் இடையிலான உறவு வலுப்பெற உதவுகின்றது.

நாட்டின் நெருக்கடிகளை வெற்றி கொள்ள அனைவரும் ஒன்றிணைந்து கடினமாக உழைக்க வேண்டிய தருணம் இது. இந்தத் தருணத்தில் இலங்கையில் மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் விலகி, சுபீட்சமான வாழ்வு அனைவருக்கும் ஏற்பட வேண்டும். மக்கள் அனைவருக்கும் நலம் நல்க நல்லூர் கந்தனை அனைவருமாக ஒன்றுகூடி பிரார்த்திப்போம் என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆடை ஏற்றுமதி நீடிக்குமா?

**இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை( சுமார் 18 ஆயிரத்து 300 கோடி ரூபாவை) கடந்துள்ளது என்று தெரிவித்திருக்கின்றது இலங்கை முதலீட்டுச் சபை.**

**ஜுன் மாதத்தில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் 536.65 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், ஜுலை மாதத்தில் அதே வருமானம் 522.13 மில்லியன் டொலர்களாகவும் பதிவாகியுள்ளது.**

**இந்த வருடத்தின் முதல் 7 மாதங்களைக் கருத்தில் கொண்டால், நாட்டின் ஆடை ஏற்றுமதி வருமானம் 3.3 பில்லியன் ( ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கு அதிகம்) அமெரிக்க டொலர்களை கடந்துள்ளது.**

**2021ஆம் ஆண்டில் ஆடை ஏற்றுமதி மூலம் இலங்கை 5.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளது.**

**இதில் இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டும்.**

**ஒன்று – இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் நின்று, நிலைத்து, தாக்குப்பிடிக்கும் ஒரே ஏற்றுமதித் துறை ஆடை உற்பத்திதான்.**

**அடுத்தது – இலங்கையின் அந்நிய செலாவணித் தேவையைப் பொறுத்தவரை இத்துறை மூலம் கிட்டுவது யானைப் பசிக்கு சோளப்பொறி போடுவது போன்ற மூக்குத்தூள் அளவுதான்.**

**இந்த வருமானம் கூட எத்தனை நாளைக்கு சாத்தியம் என்பதுதான் இப்போதுள்ள சந்தேகம்.**

**அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கால் இத்துறையும் எப்போது முற்றாகச் செயலிழந்து அழிபட்டுப் போகும் என்கின்ற கேள்வி எழுந்துள்ளது.**

**ஆடை உற்பத்தி துறை இன்று ஓரளவு எழுந்திருப்பதற்கு ஒரே காரணம் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியுள்ள ஜி.எஸ்.பி. வரிசலுகை ஆகும். இலங்கையில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதியாகும் ஆடை வகைகளுக்கு வரி விதிக்காத சலுகையை இலங்கைக்கும் மற்றும் சில நாடுகளுக்கும் மட்டுமே ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியிருக்கின்றது. அதனால் அந்த நாடுகள் இந்த பொருள்களை ஏனைய நாடுகளுடன் போட்டியிட்டுக் கொண்டு மிகக் குறைந்த விலையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.**

**இலங்கையில் மனித உரிமைகள், தொழிலாளர்கள் உரிமைகள், பாலின சமத்துவம், சுற்றுச்சூழல் பேணல் போன்ற முக்கிய விடயங்களில் ஆரோக்கியமான நிலைமை தொடர்ந்தால் மட்டுமே இந்த சலுகையும் தொடரும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெளிவாக அறிவுறுத்தி இருக்கின்றது.**

**இலங்கையின் காட்டுமிராண்டித்தனமான – கொடூரமான – அடிப்படை நீதியற்ற – பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்கனவே இந்த விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் விதித்து விட்டது.**

**தலையசைத்து விட்டு வந்த இலங்கை அரசு, அதற்கு பதிலாக அந்தச் சட்டத்தின் நடைமுறையாக்கத்தைத்தான் இப்போது முடுக்கிவிட்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் அந்த வரிச் சலுகை வசதியும் எச்சமயத்திலும் பறிபோகக்கூடிய ஏது நிலைகள் உருவாகியுள்ளன. அரசுக் கட்டமைப்பு மனித உரிமைகள் பேணும் விடயத்தில் தன்னை விரைந்து திருத்திக் கொள்ளாவிட்டால் இந்தச் சலுகையும் பறிபோகும் ஆபத்து உண்டு.**

**முன்னரும் மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆட்சியில் இவ்வாறான மோசமான மனித உரிமை மீறல் போக்கைக் காரணம் காட்டி, இச்சலுகை பல ஆண்டுகள் பறிபோய் இருந்தமையும், இலங்கையில் திறக்கப்பட்ட பல ஆடைத் தொழிற்சாலைகள் இதனால் இழுத்து மூடப்பட்டமையும் மறக்கக் கூடியவை அல்ல.**

**ரணிலின் அரசு எதேச்சாதிகாரப் போக்கில் இருந்து தன்னைத் திருத்திக் கொள்ளாவிட்டால் எஞ்சியிருக்கும் இந்த ஆடை தொழில்துறையும் முடங்கிப் போவது காலத்தின் கட்டாயமாகி விடும்.**

## கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல்

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே, களனி பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர் ஹான் ஜீவந்த மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பிக்கு சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் கல்வெள சிறிதம்ம தேரர் ஆகியோர், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்யவுள்ளனர்.

குறித்த மூன்று செயற்பாட்டாளர்களின் சார்பில் பேசவல்ல சட்டத்தரணி நுவான் போபகே, இதனைத் தெரிவித்தார்.

மூவரும் தற்போது தங்காலையில் உள்ள பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்கள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களது உறவினர்களுக்குச் சென்று வருவதற்கான உரிமைகள் வழங்கப்படும் எனவும் தனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று போபகே குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. எனவே அவர்களை பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் வைத்திருப்பது அவர்களின் மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

இரண்டாவதாக, கொழும்பில் போதுமான மற்றும் அதிகமான தடுப்பு மையங்கள் இருக்கும் போது, சட்டத்தரணிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் எமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதற்காக, அவர்கள் தங்காலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என சட்டத்தரணி குற்றம் சுமத்தியுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி, கொழும்பில், ஓகஸ்ட் 18 மாலை நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, இந்த மூன்று செயற்பாட்டாளர்களும் கைது செய்யப்பட்டனர். ஆரம்பத்தில் 72 மணி நேர தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அவர்கள் தற்போது 90 நாள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர், இதற்கு பாதுகாப்பு அமைச்சு, கடந்த திங்கட்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு சுகாதாரப் பணிப்பாளராக நேற்று முதல் கொஸ்டா நியமனம்

(புழுலுல்லாஹ் பர்ஹான்)

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக வைத்தியர் டி.ஜி.எம். கொஸ்டா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. ஜே.ஜே.முரளிதரன் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் வைத்து நேற்றுப் புதன்கிழமை உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

அத்தோடு இதுவரை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றி, கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக நியமனம் பெற்று இடமாற்றம் செல்லும் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தௌபீக்குக்கான விடுவித்தல் கடிதத்தையும் இதன் போது மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. ஜே.ஜே.முரளிதரன் வழங்கிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## சமுர்த்திப் பயனாளிகளுக்கான வீட்டு நிர்மாணத்துக்கு அடிக்கல்



திருகோணமலை – தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் சமுர்த்தி திணைக்களம் ஊடாக புதிய வீட்டு நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று நேற்று நடைபெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க, இந்த வீட்டுத் திட்ட நிர்மாணிப்புக்கான அங்குரார்ப் பண வைபவம் நடைபெற்றது.

இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹிஸ்புல்லா, திட்ட உதவியாளர் எம்.ஏ.எம்.நஜீப் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மீராநகர், சிராஜ்நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தலா ஆறு இலட்சம் ரூபாய் செலவில் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

சமுர்த்தி விசேட வீட்டுத் திட்டத்தின் கீழ், உரிய பயனாளிகளுக்கு இவ்வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைனின் சுதந்திர தினமான நேற்று ரஷ்யாவின் ஏவுகணைக்கு 22 பேர் பலி



கீவ்,ஓக.25

உக்ரைனின் சாப்லினோ ரயில் நிலையத்தின் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர்.

உக்ரைன் மீதான ரஷ்யப் போர் நேற்றுடன் 6 மாதங்களை கடந்தது. போரின் 6 ஆவது மாதத்தை நிறைவு செய்த நேற்றைய தினம், உக்ரைன் தனது 33 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. சோவியத் யூனியனிலிருந்து 1991ஆம் ஆண்டு உக்ரைன் சுதந்திரம் பெற்றதை நேற்று கொண்டாடியது.

இதையொட்டி ரஷ்யா தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தும் என்றும், எனவே மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஏற்கனவே எச்சரித்த இருந்தார். இந்த நிலையில், நேற்று, உக்ரைனின் மத்திய டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் பகுதியில் உள்ள சாப்லினோ நிலையத்தின் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர். ஐம்பதுக்கும் மேற் பட்டோர் காயமடைந்தனர்.

சுதந்திர தினத்தையொட்டி ஐ.நா பாதுகாப்பு கவுன் ஸிலில் காணொலி வாயிலாக ஆற்றிய உரையின் போது உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி இதனை அறிவித்தார். அதிபர் ஜெலன்ஸ்கி பேசியதாவது:–

டொனெட்ஸ்கில் இருந்து மேற்கே 145 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சாப்ளின் ரெயில் நிலையத்தை ரஷ்ய ராக்கெட்டுகள் தாக்கின. அதில் ஐந்து பயணிகள் ரெயில் பெட்டிகள் தீக்கிரையாகின. அங்கு மீட்புப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஆனால், துரதிர்ஷ் டவசமாக, இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர். ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயம டைந்தனர். மேலும், சினெல்னிகோவ் மாவட்டத்தில் உள்ள டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் பகுதியில் பிற்பகல் 3 மணியளவில், ரஷ்ய ராக்கெட் ஒரு வீட்டில் மோதி யது.அந்த ராக்கெட் தாக்குதலில் 11 வயதுக் குழந்தை உட்பட சிலர் உயிரிழந்தனர். உக்ரைன் இறுதி வரை போராடும். – என்று அவர் தெரிவித்தார்.

## கனவில் ஆடு வெட்டுவதாக நினைத்து தன் அந்தரங்க உறுப்பை வெட்டியவர்

### கானா நாட்டில் கனவு செய்த விபரீதம்



கானா நாட்டைச் சேர்ந்த ஒருவர், கனவில் ஆடு வெட்டுவதாக நினைத்து தன் அந்தரங்க உறுப்பை வெட்டிக்கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள கானா நாட்டைச் சேர்ந்த ஒரு விவசாயி கோபி அட்டா. 34 வயதான இவர், தூங்கிக்கொண் டிருந்தபோது இவருக்கு ஆட்டை வெட்டுவது போன்ற கனவு வந்துள்ளது. அப்போது அவர் கையில் இருந்த கத்தியைக்கொண்டு தனது அந்தரங்க உறுப்பின் ஒரு பாகத்தை தவறுதலாக வெட்டியுள் ளார். இதையடுத்து வலியால் கனவு கலைந்தது. உடனே தனக்கு நேர்ந்த அவலத்தை நினைத்து பதறிவிட்டார். இரத்தத்துடன் துடித்துக் கொண்டிருந்த கோபியை அவரது சுற்றத்தார் உடனடியாக மருத்துவமனையில் கொண்டு சேர்த்துள்ளனர். நல்ல வேளை யாக அவரது உயிருக்கு ஏதும் ஆபத்து ஏற்படாமல் மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். தற்போது ஓய்வில் உள்ள அவர் தன் கையில் எப்படி கத்தி வந்தது என்றும், நான் எப்படி இதை செய்தேன் என்றும் தெரிவில்லை என்று கூறியுள்ளார். இவருக்கு மேற்படி ஒரு அறுவை சிகிச்சைசெய்ய வேண்டும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இந்த அறுவை சிகிச்சை முடிந்து சுமார் ஒன்றரை மாதம் முறை யாக ஓய்வெடுத்தால் இயல்பாக உறுப்பு செயல்பட தொடங்கலாம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## உலகைத் தனியாகச் சுற்றி வந்து சாதனை படைத்த இளம் விமானி

### 5 மாதங்களில் 5 கண்டங்கள், 52 நாடுகள்

பெல்ஜியம் நாட்டை சேர்ந்த இங்கிலாந்து வம்சாவளி இளைஞரான மேக் ரதர்போர்ட் (17 விமானத்தில் தனியாக பறந்து உலகை சுற்றி வந்ததன் மூலம் தனியாக உலகை வலம் வந்த இளம் விமானி என்கிற சாதனையைப் படைத் துள்ளார்.

மேக் ரதர்போர்ட்டின் இந்த சாதனை பயணம் பல்கேரியா தலைநகர் சோபியாவில் இருந்து கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி தொடங்கியது.

மணிக்கு 300 கி.மீ. வேகத்தில் செல்லும் உலகின் அதிவேக அல்ட்ராலைட் விமானங்களில் ஒன்றான 'ஷார்க்' என்கிற விமானத்தில் பயணம் செய்த மேக் ரதர்போர்ட் 3 மாதத்தில் தன்னுடைய லட்சிய பயணத்தை நிறைவு செய்ய திட்டமிட்டி ருந்தார். ஆனால் பருவமழை, மணல் புயல் மற் றும் கடுமையான வெப்பம் என அவரது வழியில் எதிர்பாராத பல தடைகள் வந்ததால் பயணம் நீண்ட காலம் நீடித்தது. அதன்படி கடந்த 5 மாதங் களில் 5 கண்டங்களில் உள்ள 52 நாடுகளைச் சுற்றி வந்த மேக் ரதர்போர்ட் நேற்று பல்கோரியா தலைநகர் சோபியாவில் விமானத்தைத் தரையிறக்கி சாதனொ பயணத்தை நிறைவு செய்தார். மேக் ரதர்போர்ட்டை வரவேற்கவும் அவரது சாதனைகளைக் கொண்டாடவும் அவரது குடும்பத்தினர் உள்பட ஏராளமான மக்கள் விமான நிலையத்தில் குவிந்திருந்தனர். அவர்கள் கரவொலிகளை எழுப்பியும், ஆரவாரம் செய்தும் மேக் ரதர்போர்ட்டுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு தனது 15 வயதில் விமானிக்கான உரிமத்தை பெற்று உலகின் இளம் வயது விமானி என்கிற பெருமையை அடைந்த



மேக் ரதர்போர்ட் தற்போது 5 மாதங்களில் உலகை தனியாக சுற்றி வந்த இளம் விமானி என்ற சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன் 19 வயதில் விமானத்தில் தனியாக உலகை சுற்றி வந்த இளம் விமானி என்கிற பெருமைக்குரியவர் ஜாரா ரதர்போர்ட். இவர் வேறு யாரும் அல்ல, மேக் ரதர்போர்ட் மூத்த சகோதரி தான். அதாவது, தனது அக்காவின் சாதனையைதான் மேக் ரதர்போர்ட் முறியடித்துள்ளார்.

## அமெரிக்காவில் மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு; 4 சிறுவர் காயம்!

வொஷிங்டன்,ஓக.25

அமெரிக்காவில் சிகாகோ மாகாணத்தில் பள்ளி வளாகம் அருகே பொதுமக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள சிகாகோ மாகாணத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளி அருகே ஐஸ்கிரீம் விற்பனை கடை உள்ளது. இங்கு நேற்று மதியம் காரில் வந்த மர்மமனிதன் ஒருவன் திடீரென தான் வைத்து இருந்த துப்பாக்கியால் பொதுமக்கள் மீது சரமா ரியாகச் சுட்டான். பின்னர் அவன் வாகனத்தில் ஏறி தப்பி விட்டான். இந்த துப்பாக்கிச் சூட்டில் 4 சிறுவர்கள் படுகாயம் அடைந்தனர். இதில் 15 வயது சிறுவன் ஒருவனுக்கு முகம் மற்றும் கழுத்து பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது. அவனது நிலைமை கவலைக்கிட மாக உள்ளது. இந்த துப்பாக்கி சூட்டில் ஈடுபட்ட மர்ம ஆசாமி அங்கிருந்து தப்பியோடிய நிலையில், அந்த நபரைத் தேடி கண்டு பிடிக்கும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# கலைஞர் கருணாநிதியின் நினவாக சென்னையில் மெரினாக் கடற்கரையில் பேனா நினைவு சின்னம்!

சென்னை,ஒக.25

கலஞர் கருணாநிதி நினைவாகக் கடலில் பேனா நினைவு சின்னம் அமைக்க இந்தியப் பணத்தில் ரூ.80 கோடி செலவு செய்ய திட்டமிட்டுள்ளனர். 134 அடி உயரத்துக்கு பேனா நினைவு சின்னம் அமைய உள்ளது. திட்டத்துக்கு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் முன்மொழிவுகள் பெறப்பட்டு விட்டது. இதைத்தொடர்ந்து மாநில கடலோர ஒழுங்குமுறை ஆணைய அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.





முன்னாள் முதலமைச்சர், தி.மு.க தலைவர் அமரர் கருணாநிதிக்கு மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிட வளாகத்தில் 2.23 ஏக்கர் பரப்பளவில் அரசு சார்பில் நினைவிடம் கட்டப்பட்டு வருகிறது. உதயசூரியன் வடிவத்தில் நினைவிடத்தின் முகப்பு அமைகிறது. நினைவிடத்தின் பின்புறம் 360 மீற்றர் தொலைவில் நடுக்கடலில் பேனா வடிவிலான நினைவு சின்னம் அமைக்க அரசு திட்டம் வகுத்துள்ளது. கருணாநிதி நினைவிடத்தின் பின்பகுதியில் பெரிய கேட் அமைத்து அதன் வழியாக மக்கள் கடல் மேல் பாலத்தில் நடந்து சென்று பேனா நினைவு சின்னத்தை அடையும் வகையில் 650 மீற்றர் தூரத்துக்கு இரும்பு பாலம் அமைக்கவும் முடிவு செய்துள்ளனர். பாலத்தில் நடந்து செல்லும் பகுதி முழுவதும் கண்ணாடி தரையாக அமைக்கப்படும். இந்த பாலம் நிலத்தின் மீது 290 மீற்றரும், கடலின் மீது 360 மீற்றரும் அமையும் வகையில் கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

கடலில் பேனா நினைவு சின்னம் அமைக்க ரூ.80 கோடி செலவு செய்ய திட்டமிட்டுள்ளனர். 134 அடி உயரத்துக்கு இந்த பேனா நினைவு சின்னம் அமைய உள்ளது. இந்த திட்டத்துக்கு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் முன்மொழிவுகள் பெறப்பட்டு விட்டது. இதைத்தொடர்ந்து மாநில கடலோர ஒழுங்குமுறை ஆணைய அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடலில் கட்டுமானங்கள் மேற்கொள்ள மாநில அளவில் அனுமதி வழங்கினால் மட்டும் போதாது என்பதால் மத்திய கடலோர ஒழுங்குமுறை மண்டல மேலாண்மை ஆணைய அனுமதிக்கு அனுப்பி வைக்க மாநில ஆணையம் பரிந்துரைத்தது.

இந்த திட்டத்திற்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு, சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம், சூழலியல் அபாய மதிப்பீடு ஆய்வு, பேரிடர் மேலாண்மை திட்டம் மற்றும் அவசர கால செயல் திட்டம் போன்றவற்றை தயார் செய்து தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் வாயிலாக பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தி அதன் பிறகு மத்திய அரசிடம் விண்ணப்பிக்க முடிவு செய்யப்பட்டது.

இந்தநிலையில் மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் கடலோர ஒழுங்கு முறை மண்டல மேலாண்மை ஆணைய வல்லுனர்கள் அடங்கிய மதிப்பீட்டு குழு கூட்டம் 'ஒன்லைன்' வாயிலாக நேற்று நடந்தது. இதில் பேனா நினைவு சின்னம் அமைக்க அனுமதி கோரும் விண்ணப்பம் ஆய்வுசெய்யப்பட்டது. அப்போது 14 பேர் அடங்கிய வல்லுனர் குழு இந்த திட்டம் குறித்து விரிவாக ஆய்வு செய்தது.

இந்த குழு விரைவில் பரிந்துரை அளிக்க உள்ளது. நிபந்த னைகளை விதித்து இந்த திட்டத்தை செயல் படுத்தலாம் என பரிந்துரைக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இதன் அடிப்படையில் மத்திய ஆணையம் முடிவெடுக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதன் மூலம் பேனா நினைவு சின்னம் அமைக்க ஆரம்ப கட்ட அனுமதிகள் கிடைத்து விடும் என தெரிகிறது.

## டெம்போ – லொறி மோதி விபத்து கர்நாடகவில் ஒன்பது பேர் மரணம்



கர்நாடக மாநிலம் தும்குர் மாவட்டத்தில் உள்ள கலம்பெல்லா என்கிற கிராமம் அருகே இன்று அதிகாலையில் டெம்போ ஒன்று லொறி மீது மோதி நடந்த விபத்தில் குறைந்தது 9 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இறந்தவர்கள் ரெய்ச்சூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தினசரி கூலித் தொழிலாளர்கள் என்றும், பெங்களூரு நோக்கிச் சென்று கொண்டிருந்தவர்கள் என்றும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு மாற றப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து துமகுரு மாவட்டப் பொறுப்பாளரும் உள்துறை அமைச்சருமான அரக ஞானேந்திரா வெளியிட்டுள்ள அறிக்கையில் –

மாவட்டதுணைஆணையர்மற்றும்காவல்கண்காணிப்பாளரிடம் தாம்தொடர்புகொண்டுபேசினார்எனவும்,காயமடைந்தவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கப்படுவதை கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## மூதாட்டிக்குச் சிரித்த முகத்துடன் விடை கொடுத்த கேரளக் குடும்பம்

### இறுதி நிகழ்வுப் படத்தால் சர்ச்சை

கோட்டயம்,ஒக.25

கேரளாவில் ஒரு குடும்பமே, இறந்துபோன மூதாட்டியின் உடல்வைக்கப்பட்ட பெட்டியுடன் சிரித்த முகமாய் படம் எடுத்தது, சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.



சாவு வீட்டில் யாரையாவது சிரித்த முகத்தில் பார்க்க முடியுமா? ஆனால் கேரளாவில் ஒரு குடும்பமே, இறந்துபோன மூதாட்டியின் உடல் வைக்கப்பட்ட பெட்டியுடன் சிரித்த முகமாய்ப் படம் எடுத்தது, சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மல்லப்பள்ளியைச் சேர்ந்தது பனவெலில் குடும்பம். அந்த குடும்பத்தின் 95 வயது மூதாட்டி மரியம்மா வர்கீஸ் கடந்த வாரம் இறந்துபோனார். இவரது கணவரான கிறிஸ்தவ மதபோதகர் வர்கீஸ் ஏற்கனவே மரணம் அடைந்துவிட்டார். இவர்களுக்கு 9 குழந்தைகள், 19 பேரக்குழந்தைகள். அனைவரும் உலகின் பல்வேறு நாடுகளில் வசிக்கிறார்கள். ஆனால் 4 தலைமுறைகளைச் சேர்ந்த அவர்களில் பலர், மூதாட்டியின் இறுதிமூச்சின்போது அருகில் இருக்க வந்துவிட்டார்கள். மூதாட்டி இறந்ததும் மத வழக்கப்படி முறையாக இறுதிச்சடங்கு செய்தவர்கள், அதற்கு முன் அவரது உடல் வைக்கப்பட்ட கண்ணாடி பெட்டியுடன் சிரித்த முகத்தோடுகுழுபடமும்எடுத்துக்கொண்டார்கள்.

அந்த படம் சமூக வலைதளத்தில் பரவியதும்தான் சர்ச்சை பற்றிக்கொண்டது.'இது என்னப்பா... எழவு வீடா, பார்ட்டி கொண்டாட்டமா? இப்படியா சிரிச்சிக்கிட்டு போஸ் கொடுப்பாங்க?' என்று சிலர் சிடுசிடுக்க, வேறு சிலரோ, 'துக்க வீடு என்றாலே இறுக்கமான முகத்துடன்தான் இருக்க வேண்டுமா? இப்படி கலகலப்பாகவும் இருக்கலாமே?' என்று ஆதரவுக்கொடி பிடிக்கிறார்கள். மூதாட்டியின் மூத்த மகனான அருட்தந்தை ஜோர்ஜ் உம்மனோ கூறும்போது, 'மற்றவர்களின் கருத்து பற்றி எங்களுக்குக் கவலையில்லை. நிறைவான வாழ்வை வாழ்ந்து முடித்த எங்கள் தாயின் மரணத்தின்போது குடும்பத்தினர் அனைவரும் இயல்பான உணர்வை வெளிப்படுத்தினோம். பின்னர், அவருடனான சிரிப்பும், நெகிழ்வுமான தருணங்களை ஒவ்வொருவரும் பகிர்ந்து கொண்டோம். அப்போது எடுத்த ஒரு படம்தான் இது. 10 ஆண்டுகளுக்கு முன் எங்கள் தந்தை இறந்தபோதும் இப்படித்தான் மகிழ்வாக இறுதி விடை கொடுத்தோம்' என்கிறார்.

## சென்னையில் மிக சுதந்திரமாக வாழும் ஒரு பாலினத் தம்பதியர்!



திருவனந்தபுரம்,ஒக.25

கேரள மாநிலம் ஆலுவா பகுதியைச் சேர்ந்தவர் ஆதிலா நஸ்ரின், இவரது தோழி பாத்திமா நூரா. இவர்கள் இருவரது பெற்றோரும் வளைகுடா நாட்டில் வேலை செய்தனர். அப்போது தோழிகள் இருவருக்குள்ளும் தன்பாலின சேர்க்கை ஏற்பட்டது.

இதை அறிந்து பாத்திமா நூராவை பெற்றோர் கேரளாவுக்கு அனுப்பினர். ஆனால் அவரைத் தேடி, கேரளாவுக்கே வந்து விட்டார் ஆதிலா நஸ்ரின்.

ஒரு கட்டத்தில் இருவரும் சேர்ந்து கடந்த மே 19 ஆம் வீட்டை விட்டு வெளியேறினர். உறவினர்கள் தேடி பாத்திமா நூராவை வலுக்கட்டாயமாக இழுத்து வந்தனர். ஆதிலா நஸ்ரின், தங்கள் மகள் பாத்திமா நூராவைக் கடத்தி வந்ததாகவும் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர். அதிர்ச்சியடைந்த ஆதிலா நஸ்ரின், கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கை விசாரித்த கேரள உயர்நீதிமன்றம் ஆதிலா நஸ்ரின், பாத்திமா நூரா இருவரும் சேர்ந்து வாழ கடந்த மே மாதம் 31 ஆம் திகதி அனுமதி வழங்கியது. கடந்த 3 மாதங்களாக ஆதிலா நஸ்ரினும், பாத்திமா நூராவும் சென்னையில் வீட்டை வாடகைக்கு எடுத்து சேர்ந்து வசித்து வருகின்றனர்.

இதுகுறித்து ஆதிலா நஸ்ரின், பாத்திமா நூரா இருவரும் 'இந்து தமிழ் திசை'யிடம் கூறுகையில் –"எங்கள் உணர்வைப் புரியாமல் பெற்றோர் உடலால் காயப்படுத்தினர். நானும், என் தோழியும் எங்கள் கருத்தில் உறுதியாக இருந்து, நீதிமன்ற உத்தரவுப்பெற்று சேர்ந்துள்ளோம். இப்போது யாருடைய தலையீடும் இல்லாமல், பறவையைப் போல் சுதந்திரமாக வாழ்கிறோம். நமக்காக வாழாத வரை வாழ்க்கை முழுமையடையாது. நாங்கள் சென்னையில் வாடகைக்கு 'பிளாட்' தேடிய போதும் கூட எங்கள் அடையாளத்தை மறைக்கவில்லை. பெரும்பாலான பெற்றோருக்கு இதுகுறித்துப் புரிதல் இருப்பதில்லை. நாங்கள் இருவருமே வேலை செய்வதால் எங்களிடம் பொருளாதாரச் சுதந்திரம் இருந்தது. அதனால் உயர் நீதிமன்றப் படியேறி, சட்ட உரிமையை நிலைநாட்டி சேர்ந்து வாழ்கிறோம். அனைத்து வியங்களிலும் தன்பாலின தம்பதியினர் சமம்தான். ஒரே பாலின உறவு குறித்த புரிதலில் மக்கள் மனதில் மிகப்பெரிய மாற்றம் தேவையிருக்கிறது" என்றனர்.

# நிந்தவூரில் கடலரிப்பைத் தடுப்பது குறித்து துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடல்





(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பைத் தற்காலிகமாகவேனும் தடுப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் நிரந்தர தீர்வை நோக்கிய நகர்வின் ஓர் அங்கமாக நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துறைசார் நிபுனர்களுடன் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இக்கலந்துரையாடலில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர்பேராசிரியர்றமீஸ்அபூபக்கர், நிந்தவூர் பிரதேச சபை கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல். றியாஸ் ஆதம், தேசிய அருங்கலைகள் பேரவையின் கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளரும் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.ஐ.எம். றியாஸ், கரையோரப் பாதுகாப்பு, கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் துளசிதாசன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ. இல்ஹாம் ஜெசீல், சிரேஷ்ட பொறியியலாளர்களான றிசாத் ஆதம் லெப்பை, கே. விஜயகாந்தன், கலாநிதி ஏ.சி.அஸ்லம் சஜா ஆகியோர் கலந்து கொண்டி ருந்தனர்.

இந்தப் பிரதேசக் கடலரிப்பு, கடந்த 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒலுவில் துறைமுக அபிவிருத்தியின் பின்னரான காலப்பகுதியில் படிப்படியாக தென்னந்தோப்புகள், விவசாய காணிகள், மீன்பிடிவாடிகள் எனக்காவுகொண்டு இப்பொழுது குடியிருப்பு பகுதிகளை காவுகொள்ள எத்தனித்திருக்கின்றது. இதற்கான தற்காலிக தீர்வுகளை நிந்தவூர் பிரதேச சபை, கரையோர பாதுகாப்பு கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் மற்றும் ஊர் சார்ந்த அமைப்புகள் இணைந்து முன்னெடுத்து வருகின்றன. இத்தோடு நிறுத்தி விடாமல் இக்கடலரிப்பு தொடர்பில் நிரந்தர தீர்வுக்குச் சாத்தியமான செயற்பாடுகள் மற்றும் முன்மொழி வுகளை வழங்குமாறு இத்துறையில் நிபுணத்துவமுள்ள சிரேஷ்ட பொறி யிலாளர்களை உள்ளடக்கிய தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் ஆலோசனை மையத்தி டம் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர் கேட்டுக் கொண்டார்.

இதன் போது கலந்து கொண்டிருந்த துறைசார் நிபுணர்கள் இக்கடலரிப்பைத் தடுப்பதற்காக அந்தப் பிரதேசத்தின் கடல் பரப்பில் நீரோட்ட அளவைப் பருவகாலத்திற்கேற்ப கணிப்பீடு செய்தவன் மூலமே நிரந்தர தீர்வு நோக்கி நகர முடியுமெனவும், அதற்காக நிலையான ஆய்வை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கட லோரப் பாதுகாப்பு கரையோர வள முகா மைத்துவ திணைக்களத்துடன் இணைந்து மேற் கொண்டு நிரந்தர தீர்வை நோக்கிய திட்டத்தை தயாரிப் பதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டன. இவ்வாய்வை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகளை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசி ரியர் றமீஸ் அபூபக்கரின் பணிப்புரையில் பொறியியல் பீட நிபுணர்களால் முன் னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலரிப்பை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த ஆவன செயுங்கள்; அரசியல் செய்யாதீர்கள்!

### முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் சீற்றம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

நிந்தவூர் கடலரிப்பை தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வெற்று அறிக்கைகளை வெளியிட்டு மக்களை ஏமாற்றாதீர்கள். உங்களால் முடியா விட்டால் இராஜினாமாச் செய்யுங்கள். இக்கடலரிப்பை வைத்து அரசியல் செய்யாதீர்கள்! – என ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள்

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அம்பாறை மாவட்டக் கரையோரப் பகுதி எங்குமே இந்தக் கடலரிப்புப் பிரச்சினை ஏற்பட்ட வண்ணமே உள்ளது. நீண்ட காலமாக நிலவும் இந்தப் பிரச்சினைக்கு இதுவரைத் தீர்வு எட்டப்படவில்லை.

கடலரிப்பு உச்சம் தொடும்போது மட்டும் அறிக்கைகள் விடுவதும், அவர், இவருடன் பேசினோம் என்று செய்தி வெளியிடுவதும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்க வழக்கமாகிப் போய்விட்டது.

கட்சி பேதங்களைத் துறந்து அம்பாறை மாவட்ட அனைத்து எம்.பி.க்களும் ஒன்றுபட்டு தீர்க்கமான, நிரந்தர முடிவை எடுங்கள். ஜனாதிபதியைச் சந்தித்து, உடன் நடவடிக்கை எடுங்கள். இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரமாக தீர்வை காணுங்கள். உங்களால் முடியா விட்டால் எம்.பி பதவி களைத் துறந்து வீடு செல்லுங்கள். இந்த கடமையை நாங்கள் பொறுப்பேற்கிறோம்.

அம்பாறை மாவட்டக் கரையோரப் பகுதிகளில் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் அரைகுறையாகவே நடந்துள்ளன. எந்தவொரு திட்டமும் பூர்த்தியடைந்ததாக இல்லை. அவ்வாறுதான் இந்த கடலரிப்பு விவகாரமும் நகர்த்தப்படுகிறது – என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## திருமலை வெருகலில் இடருதவி விநியோகம்

திருகோணமலை மாவட்டம், வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இருநூறு வறிய குடும்பங்களுக்குத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் இடருதவியாக நேற்று முன்தினம் வழங்கியது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் திரு சண்முகம் குகதாசன் இந்த உதவிகளை வழங்கி வைத்தார்.

வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், வெருகல் பிரதேச சபைத் தலைவர் விஜயரகுவரன், முன்னாள் தலைவர் சுந்தரலிங்கம் துணைத் தலைவர் சங்கர், பிரதேசசபை உறுப்பினர்கள் உட்பட ப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இந்த இடருதவி விநியோகத்துக்கான அனுசரணையைக் கனடாத் திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



## தென்கிழக்குப் பல்கலையில் 2 ஆவது சர்வதேச ஆய்வரங்கு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் தொழில்நுட்ப மாற்றத்தின் மூலம் நிலையான எதிர்காலத்தை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கான 2 ஆவது சர்வதேச ஆய்வரங்கு, தொழில்நுட்ப பீட கேட்போர் கூடத்தில் நேற்று நிகழ்வின் இணைப்பாளர் ஆர்.கே.ஏ.ஆர். காரியப்பரின் வழிகாட்ட லில் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீட் தலைமை யில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டு உரையாற்றினார். மேற்படி 2 ஆவது சர்வதேச ஆய்வரங்கின் பிரதான உரையை தென்கிழக்குப்பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியருமான எம்.எம்.எம். நாஜீம் நிகழ்த்தினார். விருந்தினருக்கான உரையை கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கே.பீ.ஹேவா கமகே ஆற்றினார். இணையத்தினூடா கவும் நேரலையாகவும் இடம் பெற்ற இந்நிகழ்வில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சார பீடத்தில் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், உயிர் முறைமைப் பிரிவின் தலைவர் கலாநிதி முனீப்.எம்.முஸ்தபா, தகவல் தொழிநுட்ப பிரிவின் தலைவர் கே.முகம்மட றிப்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த ஆய்வரங்கில் 38 ஆய்வுக் கட்டுரைகள் முன்னிலைப்படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# வடமாகாணத்தில் காணி அபகரிப்பு தொடர்பில் விசேட கலந்துரையாடல்





வடமாகாணத்தில்மக்களினுடையகாணிகளை அரசும், படையினரும் கையகப்படுத்தியுள்ளதால் மக்கள் இடம்பெயர்ந்து பல வருடங்களாக வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர் எனவும், அரசாங்கம் மக்களின் காணிகளை மக்களிடம் மீள கையளிக்க இதுவரை எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் 'வடமாகாண காணி அபகரிக்கப்பட்டோரின் குரல்' எனும் தொனிப்பொருளில் மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இது தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது, வடக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களையும் உள்ளடக்கி வருகை தந்திருந்த பிரதிநிதிகள் தமது மாவட்டங்களில் இடம்பெற் றுள்ள காணி அபகரிப்பு தொடர்பாகத் தெளிவு படுத்தியுள்ளனர். இதற்கமைய அரசாங்கம், படையினர், வனவள தொல்பொருள் திணைக்களம் போன்ற வர்கள் மக்களின் காணிகளை அபகரிப்பு செய்துள்ளனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு சிங்கள அரசாங்கத்தால் திட்டமிட்டு நாம் வெளியேற்றப்பட்டோம், எமது கிராமங்களைப் பாதுகாப்பு வலயமாக இந்த அரசாங்கம் உருவாக்கி உள்ளது.

மேலும் சிங்கள மக்களை அங்கு குடியேற்ற செய்துள்ளனர். தமிழர்களின் பாரம்பரிய நிலங்களில் இந்தக் குடியேற்றம் இடம்பெற்றுள்ளது.

எமது விளை நிலங்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. சிங்கள அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்கிறது. ஒரே குடையின் கீழ் ஒரே நாட்டில் ஓர் ஆட்சியின் கீழ் ஒரு தாய் மக்கள் போல் வாழ்வதாக ராஜபக்ஷ அரசாங்கம் கூறி வந்தது.

இந்த நிலையில் தமிழர்களின் காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு வழங்கி தமிழர்களை ஓரங்கட்டியுள்ளனர்.

இந்தப் புறக்கணிப்பு எங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனாலேயே சிங்கள மக்கள், சிங்கள அரசாங்கம் என்று கூறுகின்ற போது வெறுப்பை ஏற்படுத்துகிறது.

எனவே இந்த நிலை மாற வேண்டும். சிங்கள அரசாங்கம் தமிழர்களையும் மனிதராக ஏற்றுக் கொள்ள வேண்டும். -என பலர் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். இந்தக் கலந்துரையாடலில் வட மாகாணத்தில் தமது காணியை இழந்து பாதிக்கப்பட்ட பொதுமக் கள், அமைப்புகள் மற்றும் கிராம மட்ட தலைவர் கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 50 கோடி ரூபா பெறுமதியான கடலட்டை மற்றும் சுறா மீன்துடுப்பு மீட்பு!

இலங்கைக்கு கடத்துவதற்காக இராமநாதபுரம் அருகே பதுக்கி வைக்கப்பட்டிருந்த கடலட்டைகள், சுறா மீன் துடுப்பு என்பன பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருளகளின் சர்வதேச மதிப்பு 50 கோடி ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

இராமநாதபுரம் –திருப்புல்லாணி அருகே புளித்தோப்பு கடற்கரை பகுதியிலிருந்து இலங்கைக்கு நேற்று(புதன்கிழஷ்மை) கடத்துவதற்காக கடலட்டைகள் மற்றும் சுறா மீன்துடுப்பு என்பன ஒரு நாட்டு படகில் ஏற்றி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது கடலட்டை, சுறா மீன் துடுப்புகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய நாட்டுப்படகொன்றும் மீட்கப்பட்டுள்ளன. மேலும் இந்தக் கடத்தல் நடவடிக்கை தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கியூ பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் கனியமனல் அகழ்வு: மக்கள் எதிர்ப்புப் போராட்டம்






மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக கனிய மண் அகழ்வு இடம்பெறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பேசாலை பொது மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டம் நேற்று (புதன்கிழமை) பேசாலை நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் தொடர் எதிர்ப்புக்கு மத்தியிலும் மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக கனிய மண் அகழ்வு மற்றும் ஆய்வு பணிகள் சட்டவிரோதமாக இடம் பெறுகின்றன எனவும் அதே நேரம் மீன் வளம் மற்றும் கடல் வளங்களை அழிக்கும் காற்றாலை மின் செயற்திட்டத்தை மன்னார் தீவக பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டாம் எனக் கோரிய மக்களால் இந்த எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின் பின் பொது மகஜர் ஒன்றும் பொது மக்க ளுக்கு வாசிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடந்து பேரணியாக சென்று மன்னார் பிரதேச சபையில் மகஜரை கையளிக்க மக்கள் தீர்மானித்திருந்தனர்.

இந்த நிலையில் மகஜரை பெற்று கொள்ள வேண்டிய தவிசாளர் பிரதேச சபையில் இல்லாத நிலையில் சிறிது நேரம் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதே நேரம் பேசாலை பகுதியில் இடம்பெறும் இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் காற்றாலை செய்ற்திட்டத்திற்கு முழு பொறுப்பும் மன்னார் பிரதேச சபை தான் எனவும் மகஜரை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய மன்னார் பிரதேச சபை தவிசாளர் இஸ்ஸதீன் ஓடி ஒளிந்து விட்டார் எனவும் போராட்டத்தில் ஈட்பட்ட மக்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

தொடர்சியாக காற்றாலை மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக பிரதேச சபைக்கு முன்பாக கோங்களை எழுப்பிய பொது மக்கள், பிரதேச சபை தவிசாளர் இல்லாத நிலையில் உப தவிசாளரிடமோ அல்லது செயலாளரிடமோ மகஜரை கையளிக்க விரும்பவில்லை எனத் தெரிவித்து கலைந்து சென்றுள்ளனர்.

இந்தப் போராட்டத்தின் போது மன்னார் போசாலை பகுதியில் கடைகள் முழுவதும் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். நெடுங்கேணி கந்தசாமி ஆலய முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம்!






யாழ்ப்பாணம் – நெடுங்கேணி கந்தசாமி ஆலய முன்றிலில் கவனவீர்ப்பு போராட்டமொன்று நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி போராட்டம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையோடு நீதிக்கான மக்கள் அமைப்பால் நெடுங்கேணி கந்தசாமி ஆலய முன்றிலில் நடத்தப்பட்டது.

நிரந்தரமான அரசியல் தீர்வை வலுயுறுத்தி இடம் பெற்று வரும் நூறு நாள்செயற்திட்டத்தின் 24 ஆம் நாளான இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'கௌரவமான உரிமைக் கான மக்கள் குரல், மக்கள் குரல் ஓய்ந்திருந்ததே தவிர ஒருகாலமும் ஒடுங்கியிருக்கவில்லை, ஜனநாயகப் பாதையில் மக்களே மக்களுக்காய்' போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2022இல் வெளியிடப்பெற்றது.